# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 248/2017 | Date :28.07.2022. | PW1 |
|---|---|---|
| Name: சந்திரசேகரன் | S/o. வைத்தியலிங்கம் | Evidence Recorded Time: 12.10 P.M. to 12.35 P.M |

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தடவழி பாத்தியம் கேட்டு போட்டுள்ளேன். வழக்கு சொத்து விவரத்தில் மொத்தம் எத்தனை அயிட்டங்களாக சொத்துக்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. என்னுடைய பிரமாண பத்திரத்தில் கூறியுள்ள சொத்துக்களின் சர்வே எண் சொல்லமுடியுமா என்றால் சர்வே எண்.167, 6/எ, 6/பி, 6/சி இதுபோக உள்ள சொத்துக்களின் சர்வே எண் நினைவில்லை. இதற்கு முன்பு மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இதே பரிகாரிம் கேட்டு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அந்த வழக்கில் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்து தடத்தை தடங்கல் செய்யமாட்டோம் என்று என் சித்தப்பா வெங்கடாஜலம் ரூ.30000/– பெற்றுக்கொண்டதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு சிறிது நாட்கள் கழித்து தடத்தை பயன்படுத்துவதை தடை செய்தார்கள். அந்த வழக்கு எண்.16/2010 என்றால் வழக்கு எண் நினைவில்லை. அந்த வழக்கின் தாவா நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கின் பிராது நகலை இந்த வழக்கில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றிய விவரம் தெரியவில்லை. அந்த வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு போடப்பட்டு அன்றைய தினம் நான் ஆஜராகவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் உண்மையில் பைசல் ஏற்பட்டிருந்தால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆஜராகி அது சம்மந்தமாக தெரியப்படுத்தியிருப்போம் என்றாலும் அவ்வாறு எந்த ஒரு பைசலும் ஏற்படாத காரணத்தினால்தான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் பைசல் செய்தது சம்மந்தமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று வழக்கு தள்ளுபடி ஆன உடன் அதே பரிகாரத்தை கேட்டு மீண்டும் இந்த நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு வழக்கு தரப்பினர்கள் பொறுத்து, அதே பரிகாரத்தை மீண்டும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்பதால் முன் தீர்ப்பு தடை படி பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. என் அப்பா பெயர் வைத்தியலிங்கம், அம்மா பெயர் பாக்கியம் ஆகும். என் அம்மா இறந்துவிட்டார். என் அப்பா உயிருடன் இருக்கிறார், அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. சொத்தை எங்கள் பெயருக்கு மாற்றிவிட்டதால் என் அப்பாவை ஒரு தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை. பிரதிவாதி வெங்கடாஜலம், 2–ம் பிரதிவாதியும் சகோதரர்கள்

ஆவார். 3 முதல் 5 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவார்கள். 1–ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். 1–ம் பிரதிவாதியின் அப்பா பெயர் வைத்தி (எ) பொன்னப்பன் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் தந்தை பெயர் வைத்தி கவுண்டர் (எ) பொன்னப்பன் என்றால் வைத்தி என்றுதான் ஆரம்பம் முதலே கையெழுத்து செய்துள்ளார். என் தாத்தா பெயர் தைலப்பன், அவருடைய மனைவி பெயர் செம்பாயி ஆகும். என் தாத்தாவின் அம்மாவிற்கு ஓமலூர் தனி வட்டாட்சியர் பட்டா வழங்கியுள்ளார் அந்த சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் தெரியாது. சர்வே எண்.137/6 1 ஏக்கர் 3 செண்ட் நிலத்திற்கு என் தாத்தாவின் அம்மா பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் அந்த சொத்தில் பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்றாலும் அது பற்றி தெரியவில்லை. கோனூர் மேற்கு கிராமத்தில் எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மொத்தமாக சுமார் 3 ஏக்கர் 7 செண்ட் உள்ளது. கோனூர் மேற்கு கிராமத்தில் சர்வே எண்.4/1 பட்டா படி எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. நாங்களும், பிரதிவாதிகளும் விலை கொடுத்து வாங்கவில்லை. மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்து யாருக்கு D கார்ட் பட்டாப்படி பாத்தியப்பட்டது என்றால் யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்று தெரியாது. என் தாத்தா அனுபவித்து அதன் பிறகு என் அப்பா அனுபவித்து தற்போது நான் அனுபவித்து வருகிறேன். D கார்ட் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன சர்வே எண்ணிற்கு போட்டுள்ளேன் என்றால் சர்வே எண்.167/6 நிலத்திற்கு 1 ஏக்கர் 3 செண்ட் நிலத்திற்கு கூனாண்டியூர் கிராமத்தில் 18.10.1958–ல் குப்பாயம்மாளுக்கு D கார்ட் பட்டா வழங்கப்பட்டுள்ளது, அந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேன்.

<u>(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)</u>

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.